ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1651/13 - 2010 අප්‍රේල් 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.04.29
*1651/13 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், ரிதீகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ரிதீகம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, அனுமதி பெறாது மூன்று மாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

இந்திக கவிசிகமுவ எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் ரிதீகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் தகுதியுள்ள ஆளொருவராக, திரு. கருணாதிலக, டபிள்யூ. எம். டபிள்யூ. பி. டி. என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது ரிதீகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், ஆர். எம். ஏ. எல். ரத்நாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கருணாதிலக, டபிள்யூ. எம். டபிள்யூ. பி. டி. என்பவர், ரிதீகம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஆர். எம். ஏ. எல். ரத்நாயக,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ரிதீகம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
குருநாகல்,
2010, ஏப்பிறல் 22.

5 - 262

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.